**சுருக்கம்**

கூட்டுறவு – 2014–2015–ம் ஆண்டிற்கான மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – நலிவுற்ற 67 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு சிறப்பு காசுக்கடன் வழங்குதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்(சிஎன்1)துறை**

அரசாணை (நிலை) எண்.100          **நாள்: 24.09.2014**

**ஜய வருடம்**
**புரட்டாசி மாதம் 8ம் நாள்.**
**திருவள்ளுவர் ஆண்டு 2045**
**படிக்க :**

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கடிதம் எண்.69825/2014/தொவேச1, நாள். 25.08.2014

––––

**ஆணை :**

2014–2015–ம் ஆண்டிற்கான கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

‘‘விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ஒரு சில சங்கங்கள் நலிவுற்று செயலற்று இருந்ததை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு வழிகளில் அச்சங்கங்களை புத்துயிரூட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையிட்டு, சென்ற ஆண்டு 72 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு நிதியுதவி அளித்ததன் காரணமாக அந்த சங்கங்கள் தற்போது ரூ. 1 கோடிக்கு மேல் கடன் வழங்கும் திறனை அதிகரித்து செயல் திறனுள்ள சங்கங்களாக புனரமைக்கப்பட்டு செயல்படத் துவங்கியுள்ளது. எஞ்சியுள்ள 67 நலிவுற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் தங்களது வியாபார வணிகத்தினை மேம்படுத்தி வருவாயை அதிகரிக்க ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ.50 இலட்சத்திற்கு மிகாமல் தேவையான நிதியுதவியை சிறப்பு காசுக் கடனாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.’’

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கீழ்க்கண்ட விவரங்களைத் தெரிவித்துள்ளார் : –
தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பயிர்கடன், நகைக்கடன் மற்றும் முதலீட்டுக்கடன்கள் வழங்கி வருகின்றன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிடம் காசுக்கடன் பெற்று நகைக்கடன் வழங்கி வருகின்றன. இவ்வகையான காசுக்கடன் 12% வட்டியில் வழங்கப்பட்டு வருகிறது. ரூ.1 கோடிக்கு

குறைவாக உறுப்பினர் அளவில் கடன் நிலுவையுள்ள நலிவுற்ற 67 சங்கங்களுக்கு ரூ.50 இலட்சம் சிறப்பு காசுக்கடன் அனுமதிக்கும் பட்சத்தில் சங்க எல்லையில் உள்ள உறுப்பினர்/ பொது மக்களுக்கு பல்வகை கடன் வழங்கவும், அச்சங்கங்களில் வணிகம் மேம்படவும் இயலும். மேலும் இதன் மூலம் சங்கங்களின் வட்டி வருவாய் அதிகரித்து செயல்திறனுள்ள சங்கங்களாக மாறும்.

3. எனவே, ரூ.1 கோடிக்குக் குறைவாக உறுப்பினர் அளவில் கடன் நிலுவை வைத்துள்ள இணைப்பில் கண்டுள்ள நலிவுற்ற 67 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு தமது வியாபார வணிகத்தினை மேம்படுத்தி வருவாயை அதிகரிக்க, ஒவ்வொரு சங்கத்திற்கும் தலா ரூ. 50 இலட்சம் வீதம் ரூ.33.50 கோடி சிறப்புக் காசுக்கடன் உதவியை, தொடர்புடைய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் தத்தமது சொந்த நிதியிலிருந்து சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு 12 சதவீத வட்டி அடிப்படையில் நேரிடையாக சிறப்புக் காசுக்கடன் அனுமதி வழங்கவும் அத்தொகைக்கு 7 சதவீத வட்டித் தொகையை சம்மந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திடமிருந்தும், மீதமுள்ள 5 சதவீத வட்டி வித்தியாசத் தொகையை மட்டும் தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்தும் பெற்றுக் கொள்ள உரிய அரசாணை பெற்றுத் தருமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், 30.06.2014–இல் தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியில் ரூ.17.33 கோடி இருப்பு உள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

4. மேற்கூறிய சூழ்நிலையில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, இணைப்பில் கண்டுள்ள நலிவுற்ற 67 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வியாபார வணிகத்தினை மேம்படுத்தி வருவாயை அதிகரிக்க ஒவ்வொரு சங்கத்திற்கும் தலா ரூ.50 இலட்சம் வீதம் ரூ.33.50 கோடி சிறப்புக் காசுக்கடன் உதவியை தொடர்புடைய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் தத்தமது சொந்த நிதியிலிருந்து சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு 12 சதவீத வட்டி அடிப்படையில் வழங்கவும் நேரிடையாக அனுமதி வழங்கும் தொகைக்கு 7 சதவீத வட்டித் தொகையை சம்மந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திடமிருந்தும் மீதமுள்ள 5 சதவீத வட்டி வித்தியாசத் தொகையை மட்டும் தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்தும் பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.பி. நிர்மலா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை – 10.
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜி) துறை, சென்னை – 9.
இகோ/ உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

**இணைப்பு**

**கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்(சிஎன்1)துறை**

**அரசாணை (நிலை) எண் : 100 நாள். 24.09.2014**

| வ.எண். | மண்டலம் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | அரியலூர் –1 | மருதூர் |
| 2 | கோயம்புத்தூர் –2 | செம்மாண்டம்பாளையம் |
| | | கரவழிமாதப்பூர் |
| 3 | ஈரோடு – 1 | சவுண்டப்பூர் |
| 4 | கன்னியாகுமரி – 1 | இராமவர்மன் சிறை |
| 5 | கரூர் –1 | வாங்கல் |
| 6 | கிருஷ்ணகிரி – 1 | விளாங்காமுடி |
| 7 | மதுரை – 4 | மேலப்பட்டி |
| | | எம். போத்தநதி |
| | | பாலகிருஷ்ணமறவப்பட்டி |
| | | எம். கல்லுப்பட்டி |
| 8 | நாகப்பட்டினம் – 5 | பொறையார் |
| | | திருவிடைக்கழி |
| | | திரவாலி |
| | | நல்லாடை |
| | | ஆதினக்குடி |
| 9 | புதுக்கோட்டை – 2 | தொடையூர் |
| | | அத்தாணி |
| 10 | இராமநாதபுரம் – 3 | நரிப்பையூர் |
| | | தொருவளூர் |
| | | போகலூர் |
| 11 | சிவகங்கை – 6 | பூலாங்குறிச்சி |
| | | புதுப்பட்டி |
| | | கண்ணனூர் |
| | | கண்ணமங்கலம் |
| | | வி.புதுக்குளம் |
| | | கொம்புகாரனேந்தல் |

| | | |
|---|---|---|
| 12 | தஞ்சாவூர் –21 | ரெட்டிப்பாளையம் |
| | | வல்லம்புதூர் |
| | | வரகூர் |
| | | மேலதிருப்பூந்துருத்தி |
| | | செங்கிப்பட்டி |
| | | துக்காச்சி |
| | | ஆவிட நல்ல விஜயபுரம் |
| | | பூவத்தூர் |
| | | நெய்வாசல் |
| | | ஒக்கநாடு கீழையூர் |
| | | துறையுண்டார் கோட்டை |
| | | மகாராஜசமுத்திரம் |
| | | பெருமகளூர் |
| | | நாடியம் |
| | | விளாங்குளம் |
| | | திருவத்தேவன் |
| | | உஞ்சியவிடுதி |
| | | பொய்யுண்டார் கோட்டை |
| | | சங்கரநார்குடிக்காடு |
| | | அதம்பை |
| | | சமயன்குடிக்காடு |
| 13 | தேனி –1 | ஜெயமங்கலம் |
| 14 | திருவள்ளூர் –10 | சேலை |
| | | விஷ்ணுவாக்கம் |
| | | திரூர் |
| | | வெள்ளியூர் |
| | | வெள்ளவேடு |
| | | பேரிட்டிவாக்கம் |
| | | டி.கே. புதூர் |
| | | ஆர். கே. பேட்டை |
| | | பெருமாநல்லூர் |
| | | பொதட்டூர் வெங்கடேஸ்வரா |
| 15 | திருவாரூர் –1 | கிள்ளியூர் |
| | | |

| | | |
|---|---|---|
| 16 | தூத்துக்குடி **–6** | அழகப்பபுரம் |
| | | பேரூர் |
| | | மெத்தில்பட்டி |
| | | மந்திதோப்பு |
| | | பாண்டவர்மங்கலம் |
| | | கே. வெங்கடவரஸ்ரபுரம் |
| 17 | திருப்பூர் **– 1** | கொடுவாய் |

எம்.பி. நிர்மலா
அரசு முதன்மைச் செயலாளர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்